

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (17.12.2024) தலைமைச் செயலகத்தில், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி சந்தித்து, முதலமைச்சரின் சீரிய திட்டங்கள் குறித்து மாநில திட்டக்குழு வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினால், பள்ளிகளுக்கு குழந்தைகள் குறித்த நேரத்தில் வருவது அதிகரித்துள்ளது என்றும், 90 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட குழந்தைகளிடம் நினைவாற்றல் அதிகரித்துள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளதையடுத்து, இச்சீரிய திட்டத்தை அறிவித்து, செயல்படுத்தி வரும் முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தார். உடன் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் உள்ளார்.



காஞ்சிபுரம் மாவட்டம், செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து உபரிநீர் வெளியேற்றப்படுவதை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் கலைச்செல்வி மோகன், சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வப்பெருந்தகை ஆகியோர் உள்ளனர்.




தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.12.2024) சென்னை அண்ணா சாலையில் புதியதாக பிரம்மாண்டமாக கட்டப்பட்டுள்ள "கோ–ஆப்டெக்ஸ் கோலம்" விற்பனை நிலையத்தை திறந்து வைத்து, முதல் மற்றும் பொங்கல் திருநாள் சிறப்பு தள்ளுபடி விற்பனையை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர். பிரியா, கோ–ஆப்டெக்ஸ் செயலாட்சியர் தீபக் ஜேக்கப், துணை மேயர் மு. மகேஷ் குமார், நிலைக்குழுத்தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு உள்பட அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# வேளாண்துறை உற்பத்தித் துறையில் வேலை வாய்ப்புகளின் நிலை என்ன?

## மக்களவையில் - நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி கேள்வி!

**புதுடெல்லி, டிச. 18-**

**வேளாண் துறை, உற்பத்தித் துறையில் வேலை வாய்ப்புகளின் நிலை என்ன? என்று கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி கேள்விக்கு ஒன்றிய அமைச்சர் பதில் அளித்துள்ளார்.**

தி.மு.க.வின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி மக்களவையில் எழுத்துபூர்வமான கேள்விகளை எழுப்பியிருந்தார்.

அது வருமாறு:

"2023-24 காலமுறை தொழிலாளர் கணக்கெடுப்பில் (PLFS) தெரிவிக்கப்பட்டுள்ளபடி, விவசாய வேலைவாய்ப்பு 3.6 சதவீதம் அதிகரித்து 46.1% ஆக உயர்ந்துள்ளதாக அரசாங்கம் மதிப்பிட்டுள்ளதா? அப்படியானால், மாநில வாரியாக விவசாய வேலைவாய்ப்பு அதிகரிப்பு உட்பட மதிப்பீட்டின் விவரங்கள் என்ன? இல்லையென்றால், மதிப்பீட்டை நடத்தாததற்கான காரணங்கள்.

விவசாயத்திற்கு மீண்டும் மாறுவதற்கு காரணமான காரணிகள் மற்றும் உற்பத்தித்திறன் மற்றும் வருமான நிலைகளில் ஏற்படும் தாக்கத்தை அரசாங்கம் அடையாளம் கண்டுள்ளதா?

**நடவடிக்கைகளின் விவரங்கள் என்ன?**

உற்பத்தி மற்றும் சேவைகள் போன்ற அதிக உற்பத்தித் துறைகளை நோக்கிய மாற்றத்தை எளிதாக்குவதற்கு எடுக்கப்பட்ட, எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளின் விவரங்கள்?" ஆகிய கேள்விகளை கனிமொழி எம்பி. எழுப்பியிருந்தார்.

இவற்றுக்கு ஒன்றிய தொழிலாளர், வேலைவாய்ப்புத் துறை இணையமைச்சர் சுஷ்ரி ஷோபா காரண்டல்ஜெ எழுத்துப் பூர்வமாக பதிலளித்தார்.

அந்த பதிலில்,

"வேலைவாய்ப்பு மற்றும் வேலையின்மை குறித்த அதிகாரப்பூர்வ தரவுகள் புள்ளிவிவரங்கள் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தால் (MoSPI) 2017-18 முதல் நடத்தப்படும் வருடாந்திர காலமுறை தொழிலாளர் கணக்கெடுப்பு (PLFS) மூலம் சேகரிக்கப்படுகின்றன.

இந்த கணக்கெடுப்பு ஒவ்வொரு ஆண்டும் ஜூலை முதல் ஜூன் வரை மேற்கொள்ளப்படுகிறது.



சமீபத்திய வருடாந்திர PLFS அறிக்கைகளில் கிடைக்கும் தரவுகளின்படி, 2021-22, 2022-23 மற்றும் 2023-24 ஆண்டுகளில் விவசாயத் துறையின் தொழிலாளர்களின் சதவீதம் முறையே 45.5%, 45.8% மற்றும் 46.1% ஆக இருக்கிறது.

மேலும் இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்டு வரும் KLEMS (K: மூலதனம், L: தொழிலாளர், E: ஆற்றல், M: பொருட்கள் மற்றும் S: சேவைகள்) தரவுத்தளத்தில் அகில இந்திய அளவில் தொழிலாளர் உற்பத்தித்திறன் (LP) உள்ளிட்ட வேலைவாய்ப்பு மதிப்பீடுகளை வழங்குகிறது.

KLEMS இன் சமீபத்திய தரவுகளின்படி ஹோட்டல்கள், ரெஸ்டாரென்ட்டுகள், நிலக்கரி, பெட்ரோலியம் சுத்திகரிப்பு நிறுவனங்கள், அணுசக்தி, தபால் மற்றும் தகவல் தொடர்பு, மரம் தொடர்பான தயாரிப்புகள், மின்சாரம், எரிவாயு, தண்ணீர் சப்ளை போன்ற துறைகளில் 2021-22 ஆம் ஆண்டை விட, 2022-23 ஆம் ஆண்டு தொழிலாளர் உற்பத்தித்திறன் அதிகரித்துள்ளது.

வேலைவாய்ப்பை உருவாக்குவதோடு, வேலைவாய்ப்பை மேம்படுத்துவதும் அரசாங்கத்தின் முன்னுரிமையாகும். அதன்படி, நாட்டில் வேலைவாய்ப்பை உருவாக்க இந்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

அரசின் வெவ்வேறு அமைச்சகங்கள், துறைகள் வேலை வாய்ப்பை மேம்படுத்த பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றன.

பிரதமர் வேலைவாய்ப்பு மேம்பாட்டுத் திட்டம், தீனதயாள் உபாத்யாயா கிராம வேலை வாய்ப்புத் திட்டம், ஊரக சுய வேலை மற்றும் பயிற்சி மையம், தீனதயாள் உபாத்யாயா அந்தியோதயா திட்டம், தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், பிரதம மந்திரி முத்ரா திட்டம், மேக் இன் இந்தியா, ஸ்டார்ட் அப் இந்தியா, ஸ்டேண்ட் அப் இந்தியா உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் மூலம் வேலை வாய்ப்பு உருவாக்குதலை ஊக்கப்படுத்தி வருகின்றன.

**வேலைவாய்ப்புகள் பற்றிய விவரங்கள்!**

இந்த திட்டங்களால் உருவாக்கப்பட்ட வேலை வாய்ப்புகள் பற்றி https://dge.gov.in/dge/schemes_programmes. இணைய தளத்தில் அறிந்துகொள்ளலாம்.

மேலும் ஒன்றிய அரசு ஸ்கில் இந்தியா இயக்கம் மூலம் நாடு முழுதும் திறன் மேம்பாட்டு பயிற்சிகளை பள்ளிகள், கல்லூரிகள், பயிற்சி மையங்கள் வழியாக அளித்து வருகிறது.

பிரதான் மந்திரி கௌஷல் விகாஸ் யோஜனா, ஜன் ஷிக்ஷான் சன்ஸ்தான், தேசிய பயிற்சி மேம்பாட்டுத் திட்டம், கைவினைஞர்கள் பயிற்சித் திட்டம் ஆகியவை ஐ.டி.ஐ.கள் மூலம் செயல்படுத்தப்படுகின்றன.

மேலும், 2024-25 பட்ஜெட்டில், பிரதமரின் 5 திட்டங்கள் மற்றும் முன்முயற்சிகளின் தொகுப்பை அரசாங்கம் அறிவித்துள்ளது. இதன் நோக்கம், 4.1 கோடி இளைஞர்களுக்கு 5 ஆண்டு காலத்தில் வேலைவாய்ப்பு, திறன் மேம்பாடு மற்றும் பிற வாய்ப்புகளை எளிதாக்குவதாகும், இதன் மதிப்பு ரூ.2 லட்சம் கோடி ஆகும்.

ஊக்கத் தொகையுடன் கூடிய வேலை வாய்ப்பு திட்டத்துக்கு பட்ஜெட்டில் ரூ.1,07,000 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது பிரதமரின் தொகுப்புத் திட்டங்களுக்கு உட்பட்டது.

மேலும் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டம் EPFO மூலம் வேலைவாய்ப்பை உருவாக்குதல் மற்றும் முறைப்படுத்துதல், வேலைவாய்ப்பை மேம்படுத்துதல், சமூகப் பாதுகாப்பை வழங்குவது ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டிருக்ருகிறது அரசு.

ELI திட்டத்தின் மூலம் உற்பத்தித் துறையில் ஈடுபட்டுள்ள முதலாளிகளை ஊக்குவிப்பதில் சிறப்பாக கவனம் செலுத்துகிறது. மேலும், சேவைகள் உட்பட அனைத்துத் துறைகளிலும் தொழில்துறையை ஊக்குவித்தலையும் இத்திட்டம் செயல்படுத்துகிறது" என்று ஒன்றிய அமைச்சர் பதிலளித்தார்.

### எழுத்தாளர் இமையம் எழுதிய

# "கலைஞரின் படைப்புலகம்" நூல்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!

சென்னை, டிச.18-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று (17.12.2024) தலைமைச் செயலகத்தில், எழுத்தாளர் இமையம் அவர்கள் எழுதிய "கலைஞரின் படைப்புலகம்" நூலினை வெளி யிட்டார்.

நூற்றாண்டு காணும் ஆளுமைகள் எனும் தலைப்பின்கீழ் புகழ்பெற்ற அரசியல் ஆளுமைகள் மற்றும் எழுத்தாளர்கள் குறித்து சிறப்பு நூல்களை தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் 2022ஆம் ஆண்டு முதல் வெளியிட்டு வருகிறது. அந்த வரிசையில் எழுத்தாளர் இமையம் அவர்களால் "கலைஞரின் படைப்புலகம்" என்ற இந்நூல் தொகுக்கப் பட்டுள்ளது.

இந்நூலானது, கலைஞர் எழுதிய நாவல்கள், சிறு கதைகள், கவிதைகள், கட்டுரைகள், கடிதங்கள், பயண நூல், திரைக்கதை வசனங்கள், திரையிசை பாடல்கள், நெஞ்சுக்கு நீதி, உரைகள் ஆகியவற்றிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளின் தொகுப்பாகும். இந்நூலில் இந்திய அளவில் புகழ்பெற்ற 19 எழுத்தாளர்கள் எழுதிய கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன. தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுதிய ஒரு கட்டுரையும் இந்நூலில் இடம் பெற்றுள்ளது. இந்நூலில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூல்கள் எந்தெந்த ஆண்டு எழுதப்பட்டது என்ற விவரமும் காலவரிசைப்படி வழங்கப்பட்டிருக்கிறது.

இந்த நிகழ்வின்போது, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர்

நா. முருகானந்தம் பள்ளிக் கல்வித் துறைச் செயலாளர் திருமதி சோ. மதுமதி தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியி யல் பணிகள் கழக தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் முனைவர்

பொ.சங்கர், இணை இயக்குநர் முனைவர் தே. சங்கர சரவணன், எழுத்தாளர் இமையம், ஆலோசகர் தி. அப்பன்னசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.




# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

**மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சுற்றுப்பயண அறிவிப்பு**

மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்க, இரண்டு நாள் சுற்றுப்பயணமாக கோவை, திருப்பூர் மாவட்டங்களுக்குச் செல்கிறார். அங்கு அவர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளின் விவரம் வருமாறு:

**18/12/2024 புதன்கிழமை**

| நேரம் | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|
| மதியம் 03:00 மணி | திறன் மற்றும் வேலைவாய்ப்பு மையம் தொடங்கி வைத்தல். | அரசினர் தொழில்நுட்பக் கல்லூரி, கோயம்புத்தூர். |
| மாலை 04:00 மணி | கிறிஸ்துமஸ் நலத்திட்ட உதவிகள் வழங்குதல். | பெத்தேல் மாநகர பேராலயம், சத்தியமங்கலம் சாலை, கோயம்புத்தூர். |
| மாலை 05:00 மணி | கோவை மக்களவை உறுப்பினர் அலுவலகம் திறப்பு. | வ.உ.சி. மைதானம், கோயம்புத்தூர் |
| மாலை 05:30 மணி | கோவை வடக்கு - தெற்கு - மாநகர் மாவட்ட சார்பு அணி நிர்வாகிகளுடனான சந்திப்பு. | எஸ்.என்.ஆர். கலையரங்கம், நவ இந்தியா அருகில், பீளமேடு, கோயம்புத்தூர். |

**19/12/2024 வியாழக்கிழமை**

| | | |
|---|---|---|
| காலை 10:00 மணி | பேராசிரியர் பிறந்த நாளை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு மரியாதை செய்தல். | இரயில் நிலையம் எதிரில், திருப்பூர். |
| காலை 10:15 மணி | திருப்பூர் தெற்கு தொகுதி கலைஞர் நூலகம் திறப்பு விழா. | சூர்யா நகர், ஏ.பி.டி. சாலை, கருவம்பாளையம், திருப்பூர். |
| காலை 10:30 மணி | திருப்பூர் மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் அரசுத் திட்டங்கள் குறித்த ஆய்வுக் கூட்டம். | ஆட்சியர் அலுவலகம், திருப்பூர். |
| மதியம் 01:00 மணி | திருப்பூர் வடக்கு மாவட்ட சார்பு அணி நிர்வாகிகளுடனான சந்திப்பு. | பாப்பீஸ் ஹோட்டல், திருப்பூர். |
| மாலை 06:00 மணி | கழகக் கொள்கை பரப்புக்குழு இணைச் செயலாளர் வி.சி.சந்திரகுமார் இல்லத் திருமண வரவேற்பு விழா. | முத்து மஹால் திருமண மண்டபம், ஈரோடு–பெருந்துறை சாலை, வேப்பம்பாளையம், ஈரோடு. |

தி.மு.க. இளைஞர் அணி

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 16-12-2024

